அனுப்புநர்

திரு.சா.சேதுராமவர்மா
அரசுத் தேர்வுகள் இயக்குநர்,
சென்னை – 600 006.

பெறுநர்

அனைத்து மாவட்ட அரசுத் தேர்வுகள்
உதவி இயக்குநர்கள்.

ந.க.எண். 002295/எச்1/2023 நாள்: 15.02.2023

ஐயா/அம்மையீர்,

பொருள் : சென்னை– 6, அரசுத் தேர்வுகள் இயக்ககம் – மேல்நிலை இரண்டாம் ஆண்டு பொதுத் தேர்வுகள், மார்ச்/ ஏப்ரல் 2023 – தேர்வு மையங்களுக்கு முதன்மை விடைத்தாட்கள் மற்றும் முகப்புத்தாட்கள் வழங்குவதற்கான அறிவுரை வழங்குதல் – சார்பு.

*****

மார்ச்/ ஏப்ரல் 2023, மேல்நிலை இரண்டாம் ஆண்டு பொதுத் தேர்வெழுதவுள்ள மாணவர்களுக்கு வழங்கப்படவுள்ள முதன்மை விடைத்தாட்கள், முகப்புத்தாட்களை உதவி இயக்குநர்கள் 20.02.2023 முதல் 23.02.2023 வரையிலான நாட்களில் சம்பந்தப்பட்ட தேர்வு மையங்களுக்கு வழங்கி தைக்கும் பணியினை மேற்கொள்ள தலைமையாசிரியர்களுக்கு தெரிவிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

மேலும், மேல்நிலை இரண்டாம் ஆண்டு பொதுத் தேர்விற்கான முதன்மை விடைத்தாட்களின் வகைகள், முதன்மை விடைத்தாளுடன் வைத்துத் தைக்கவேண்டிய வரைகட்டத்தாள் மற்றும் வரைபடங்கள் விவரம் ஆகியவை, தேர்வு மையங்களுக்கு வழங்கும் பொருட்டு இத்துடன் இணைத்தனுப்பிவைக்கப்படுகிறது. இவ்விவரத்தினை அனைத்து தேர்வுமைய தலைமையாசிரியர்களுக்கு அனுப்பிவைக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

ஒம்/–
இயக்குநர்

<u>இணைப்பு</u>:மேற்குறிப்பிட்டவாறு

<u>நகல்</u>:

1. அனைத்து முதன்மைக் கல்வி அலுவலர்கள்
   – தகவலுக்காக வழங்கப்படுகிறது.
2. அனைத்து மாவட்டக் கல்வி அலுவலர்கள் (இடைநிலை மற்றும் தனியார் பள்ளிகள்)
   – தகவலுக்காக வழங்கப்படுகிறது.
3. கண்காணிப்பாளர், 'K' பிரிவு (அலுவலகம்).

## <u>மேல்நிலை இரண்டாம் ஆண்டு பொதுத் தேர்வு– மார்ச்/ஏப்ரல் 2023</u>

### <u>விடைத்தாட்கள் வழங்குதல் தொடர்பான அறிவுரைகள்</u>

1. <u>மேல்நிலை இரண்டாம் ஆண்டு பொதுத்தேர்வு முதன்மை விடைத்தாள்</u>

மொழிப்பாடங்களுக்கு (Language and English) **HSE-LANGUAGE** என்று குறிப்பிடப்பட்டுள்ள **30** பக்கங்கள் கொண்ட புள்ளியிடப்பட்ட / கோடிடப்பட்ட முதன்மை விடைத்தாட்களை தேர்வர்களுக்கு வழங்கவேண்டும்.

தேர்வர்கள் மொழிப்பாடங்களுக்கு கூடுதல் விடைத்தாள் கோரினால் புள்ளியிடப்பட்ட / கோடிடப்பட்ட கூடுதல் விடைத்தாட்கள் மட்டுமே வழங்கப்படவேண்டும்.

2 உயிரியல் பாடத்தைப் பொறுத்தவரையில், உயிரி–தாவரவியல் மற்றும் உயிரி–விலங்கியல் என ஒவ்வொன்றிற்கும் தனித்தனியே இரண்டு முதன்மை விடைத்தாட்கள் வழங்கப்படும். ஆனால் ஒரே ஒரு Topsheet மட்டுமே வழங்கப்படும்.

மேல்நிலை இரண்டாம் ஆண்டு பொதுத் தேர்வுக்கு **HSE - BIO - BOTANY & HSE- BIO - ZOOLOGY** என்று குறிப்பிட்டுள்ள முதன்மை விடைத்தாளையும் தேர்வர்களுக்கு வழங்கவேண்டும்.

<u>முகப்புத்தாள் மற்றும் முதன்மை விடைத்தாட்கள் தைக்க வேண்டிய முறை</u>

1. முதலில் முகப்புத்தாள் வைக்கப்பட வேண்டும்.
2. அதன் கீழ் **HSE - BIO- BOTANY** முதன்மை விடைத்தாள் வைக்கப்படவேண்டும்.
3. அதன் கீழ் **Bio-Botany** பாடத்திற்கென பயன்படுத்திக் கொள்ளவேண்டிய கோடிடப்படாத வகையிலான 4 பக்கங்கள் கொண்ட ஒரே ஒரு கூடுதல் விடைத்தாள் மட்டுமே வைக்கப்படவேண்டும்
4. அதன் கீழ் **HSE - BIO - ZOOLOGY** முதன்மை விடைத்தாள் வைக்கப்படவேண்டும்

மேற்படி 4 பகுதிகளையும் ஒன்றாகத் தைத்து ஒரே விடைத்தாள் புத்தகமாக தேர்வர்களுக்கு வழங்க வேண்டும். **BIO-ZOOLOGY** பாடத்திற்குத் தேர்வர்கள் கோரினால் கூடுதல் விடைத்தாட்கள் வழங்கலாம். அவ்வாறு பெற்று பயன்படுத்தப்படும் **BIO-ZOOLOGY** பாட கூடுதல் விடைத்தாளானது, மேற்படி விடைத்தாள் புத்தகத்தின் அடியில் வைத்துத் துளையிட்டு நூல்கொண்டு இணைத்துக் கட்டப்படவேண்டும். இது குறித்துத் தெளிவான அறிவுரைகள் வழங்கப்படவேண்டும்.

3. மேல்நிலைத் தேர்வில் கணக்குப் பதிவியல் (ACCOUNTANCY) பாடத்திற்கான விடைத்தாள் **1** முதல் **14** பக்கங்கள் கோடிடப்படாமலும், மீதமுள்ள பக்கங்கள் கோடிடப்பட்டும் இருக்கும்.

   மேல்நிலை இரண்டாம் ஆண்டு பொதுத் தேர்வுக்கு **HSE-ACCOUNTANCY** என்று குறிப்பிட்டுள்ள முதன்மை விடைத்தாளை தேர்வர்களுக்கு வழங்கவேண்டும்.

   கணக்குப்பதிவியல் பாடத் தேர்விற்கு தனியாக கணக்கீடுகள் செய்வதற்கு ஏதுவான கட்டங்கள் இடப்பட்ட கூடுதல் விடைத்தாட்கள் வழங்கப்படவேண்டும்.

4. மேல்நிலைத் தேர்வில் இதரப் பாடங்களுக்கு (கணினி, அறிவியல் பாடம் உட்பட) **HSE MAIN** என்று குறிப்பிட்டுள்ள **30** பக்கங்கள் அடங்கிய முதன்மை விடைத்தாட்களை பயன்படுத்தவேண்டும்.

5. தேர்வு மைய முதன்மைக் கண்காணிப்பாளர் தேர்வு நடைபெறுவதற்கு முன்னதாக தேவையான கூடுதல் விடைத்தாட்கள் கையிருப்பில் உள்ளதா என்பதை உறுதி செய்தல் வேண்டும்.

6. மேல்நிலை இரண்டாம் ஆண்டு பொதுத் தேர்வில் **வரலாறு** பாடத் தேர்வுக்கு முதன்மை விடைத்தாளுடன் கடைசித் தாளுக்கு முன்னர் **ஒரு இந்திய வரைபடம் (One India Map)** மற்றும் **ஒரு உலக வரைபடம் (One World Map)** ஆகியவற்றை வைத்து தைத்து வழங்கவேண்டும்.

7. **புவியியல்** பாடத் தேர்வுக்கு முதன்மை விடைத்தாளுடன் **ஒரு உலக வரைபடம்** (**One World Map**) கடைசி தாளுக்கு முன்னர் வைத்து தைத்து வழங்கவேண்டும்.

8. மேல்நிலை இரண்டாம் ஆண்டு பொதுத் தேர்வுக்கு, **வணிகக் கணிதம் மற்றும் புள்ளியியல் <u>(Business Mathematics and Statistics)</u>** பாடத்திற்கு வழங்கப்படும் முதன்மை விடைத்தாளுடன் **ஒரு வரைகட்டத்தாளினை (OneGraph Sheet)** விடைத்தாளின் கடைசி தாளுக்கு முன்னர் வைத்து தைத்து வழங்கவேண்டும்.

9. மேல்நிலை இரண்டாமாண்டு ஆண்டு பொதுத் தேர்வெழுதும் தேர்வர்களுக்கு **புள்ளியியல் (Statistics)** பாடத் தேர்வுக்கு முதன்மை விடைத்தாளுடன் **இரு வரைகட்டத்தாட்களை(Two Graph Sheets)** கடைசித் தாளுக்கு முன்னர் வைத்து தைத்து வழங்கவேண்டும்.

10. ஒவ்வொரு தேர்வு மையத்திற்கும் சிறப்பு உறைகளைப் பொறுத்தமட்டில் 20 விடைத்தாட்களுக்கு ஒரு சிறப்பு உறை என்ற வீதத்தில் கணக்கிட்டு வழங்கப்படவேண்டும். பாடத்திட்டவாரியாகவும், மொழிப்பாடங்களுக்கு மொழிவாரியாகவும் சிறப்பு உறைகள் பயன்படுத்தவேண்டும். பிற பாடங்களுக்கு பயிற்றுமொழிவாரியாக தனித்தனி உறைகள் பயன்படுத்தப்படவேண்டும்.

<u>கூடுதல் விடைத்தாட்கள் குறித்த அறிவுரை:—</u>

**கோடிட்ட/புள்ளியிடப்பட்ட முதன்மை விடைத்தாட்கள் பயன்படுத்தப்படும் தேர்வுகளுக்கு கோடிட்ட/புள்ளியிடப்பட்ட கூடுதல் விடைத்தாட்களையும், கோடிடப்படாத முதன்மை விடைத்தாட்கள் பயன்படுத்தப்படும் தேர்வுகளுக்கு கோடிடப்படாத கூடுதல் விடைத்தாட்களையும் பயன்படுத்தவேண்டும். மேலும் கணக்குப்பதிவியல் தேர்விற்கு தனியாக கணக்கீடுகள் செய்வதற்கு ஏதுவான கட்டங்கள் இடப்பட்ட கூடுதல் விடைத்தாட்கள் வழங்கப்படவேண்டும்.**

11 <u>முகப்புத்தாட்கள் தைக்கும் முறை</u>

மேல்நிலை இரண்டாமாண்டு தேர்வெழுதும் ஒவ்வொரு தேர்வருக்கும் அன்னார் தேர்வெழுதும் பாடம் ஒவ்வொன்றிற்கும் தனித்தனியான முகப்புச்சீட்டுகள் (Topsheets) வழங்கப்பட்டுள்ளன. அம்முகப்புச்சீட்டுகளை தையல் இயந்திரத்தின் உதவியுடன் 16—ம் எண் ஊசியைப் பயன்படுத்தி வெள்ளைநிற 3ply பருத்திநூல் (cotton) கொண்டு“6 SPI” (Stitches Per Inch) என்ற அளவில் தைக்கவேண்டும்.

<u>**விடைத்தாள் வகைவாரியான பக்கங்கள் எண்ணிக்கை விவரப் பட்டியல்:**</u>

| **SCRIPT CATEGORY** | **NO. OF PAGES +2** | **TYPE** |
|---|---|---|
| HSE-LANGUAGE | 30 | RULED / DOTTED |
| HSE-BIO BOTANY | 14 | UNRULED |
| Addl.Sheet (Unruled) | 04 | |
| HSE- BIO ZOOLOGY *Stitched together | 14 | UNRULED |
| HSE- ACCOUNTANCY | 30 | 1-14 UNRULED<br>15-30Account Sheets |
| HSE (OTHERS) | 30 | UNRULED |

**கூடுதல் விடைத்தாள் பற்றிய விவரம் :**

| | | |
|---|---|---|
| ADDITIONAL SHEET | 4 | UNRULED<br>(to be used only for Unruled main sheet using subjects) |
| ADDITIONAL SHEET | 4 | RULED<br>(to be used only for Ruled main sheet using subjects) |
| ADDITIONAL SHEET<br>(for HSE Accountancy Subject) | 4 | RULED (Balance Sheet ) (to be used only for Accountancy subject working) |

## Map & Graph Sheet

**HIGHER SECONDARY SECOND YEAR EXAMINATION, MARCH/APRIL 2023**

| Subjects | Graph Sheet / Map stitched with Main Answer Book |
|---|---|
| Statistics | Two Graph Sheets. |
| Business Mathematics and Statistics | One Graph Sheet. |
| History | 1. One India Map<br>2. One world Map |
| Geography | One World Map |

ஒம்/—
இயக்குநர்